நாள்: 03.09.2026
OP 47/2026 JTW 135/2024
பெயர் மணிகண்டன்
ம.சா.1

**குறுக்கு விசாரணை**

நான் OP 47/26 மனுவை விவாகரத்து கோரி தாக்கல் செய்திருந்தேன். அதேபோல் என் மனைவி என்னுடன் சேர்ந்து வாழ வேண்டும் என OP 135/24 என்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். இதற்கிடையில் எங்கள் குடும்ப பிரச்சசனையை குடும்ப பெரியவர்கள், மற்றும் சமுதாய பெரியோர்களை வைத்து சமாதானமாக பேசினோம். எங்கள் குழநதையான சர்மிகா பெயரில் எதிர்மனுதாரரை காப்பாளராக நியமனம் செய்து 12 லட்சத்தை Bank of India கம்பம் கிளையில் நிரந்தர வைப்பீடு செய்துள்ளேன். என் மனைவி மற்றும் சீர் பொருட்களை ஒப்படைத்துவிட்டேன். எதிர்மனுதாரர் மீது நான் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை பின்வாங்கி கொள்வதால் என் மனைவி விவாகரத்து கொடுக்கிறார் என்றால் சரிதான். என் மகள் என் மனைவியின் பராமரிப்பில் இருப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபனை இல்லை.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.09.03 17:28:42 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்

நாள்: 03.09.2026
OP 47/2026 JTW 135/2024
பெயர் ஹேமலதா
எ.ம.சா.1

**குறுக்கு விசாரணை**

என் கணவர் OP 47/26 மனுவை விவாகரத்து கோரி தாக்கல் செய்திருந்திருந்தார். அதேபோல் நானும் என் கணவருடன் சேர்ந்து வாழ வேண்டும் என OP 135/24 என்ற மனுவை தாக்கல் செய்தேன். இதற்கிடையில் எங்கள் குடும்ப பிரச்சசனையை குடும்ப பெரியவர்கள், மற்றும் சமுதாய பெரியோர்களை வைத்து சமாதானமாக பேசினோம். எங்கள் குழந்தையான சர்மிகா பெயரில் என்னை காப்பாளராக நியமனம் செய்து 12 லட்சத்தை Bank of India கம்பம் கிளையில் நிரந்தர வைப்பீடு செய்துள்ளார். ஒரு கூட்டுக்குறிப்பானை பிறப்பித்துக்கொண்டோம். அது எ.ம.சா.ஆ.1 ஆகும். என்னுடைய நகை மற்றும் சீர் பொருட்களை பெற்றுக்கொண்டேன். அவருடைய பொருட்களை ஒப்படைத்துவிட்டேன். என் மீது என் கணவர் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகளை பின்வாங்கி கொள்வதால் நான் சுயமாக முடிவெடுத்து விவாகரத்து கொடுக்க சம்மதிக்கிறேன். எனக்கு ஆயுட்கால ஜீவனாம்ச தொகை எதுவும் தேவையில்லை. என் மகள் என்னுடைய பராமரிப்பில் தான் இருக்கிறார்.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.09.03 17:28:51 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்